**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 305/2011**

திரு.வேலுசாமி (P.W. –2) **3 .2.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4,13 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. வாதி, 1ம் பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர்கள். தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. என்ன ஆவணத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் தெரியாது.வாதி தாவாவில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சொத்து இருப்பதாக தாக்கல் செய்யப்பட்டது. என்ன பரிகாரம் என்று சொல்லமுடியாது என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. சுப்பன் கவுண்டர் உயிருடன் இருந்தபோது அவருடைய சொத்துக்களை யாருக்கு விற்பனை செய்தார் என்றால் தெரியாது என்றால் சரி. எந்த விவரமும் தெரியாமல் பொய்யான சங்கதிகளுடன் முதல் விசாரணை சங்கதிகளை தாக்கல் செய்துள்ளது செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்து 7.9.1960 ம் ஆவணத்தின் படி பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொட்தது என்றால் அதை பற்றி தெரியாது. அதன்பிறகு கணபதிகவுண்டர் பழனிகவுண்டர் இறப்பிற்கு பிறகு அனுபவம் செய்துவந்தார் என்றால் சரி. அவருக்கு தான் சொத்து பாத்தியம். கணபதி கவுண்டர் அவருடைய மகன் பாலசுப்பிரமணியம் பெயரில் 24.1.2013 ம் தேதி உயில் ஏற்படுத்தியுள்ளார் என்றால் தெரியாது. தாவா

செத்து உயிலின் படி 14 ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியம் சுவாதீனத்தில் உள்ளதால் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் தவறு. தாவா சொத்தில் பாலசுப்பிரமணியம் சுவாதீனத்தில் உள்ளார். தாவா சொத்தில் வாதி, 1ம் பிரதிவாதியோ என்றுமே சுவாதீனத்தில் இல்லை. அதற்கு ஆவணங்களும் இல்லை. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து சுப்பன் கவுண்டர் 18.9.1989 ம் தேதி 7 முதல் 12 பிரதிவாதிகளின் தந்தை பெயரில் சொத்துக்களை பாகப்பிரிவினையின் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் தவறு. சுப்பிரமணியம் இறந்த பிறகு அந்த சொத்தில் 7 முதல் 12 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்றால் தவறு. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2025.02.03 20:03:42 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.